**குழித்துறை நகராட்சி**

**குழித்துறை நகர்மன்றத்தின்** சாதாரணக்கூட்டம் 27-12-2024 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு **நடைபெற**விருந்த **கூட்டம் திரு. மன்மோகன் சிங் அவர்கள் மறைவு காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. அக்கூட்டம் 28-01-2025 செவ்வாய் கிழமை மாலை** 3.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) 2025-ம் வருடம் நடைபெறவுள்ள 100-வது வாவுபலி பொருட்காட்சியை நினைவு கூறும் வகையில் குழித்துறை தபால் நிலைய சந்திப்பில் அலங்கார வளைவு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1126 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) குழித்துறை நூலகத்தின் அருகில் நகராட்சி ஆணையருக்கான வீடு மற்றும் பூங்கா அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1126 (2) தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.1.

.குழித்துறை நகராட்சி பொது சுகாதாரம் பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.893, நாள் 13-06-2024 தீர்மானிக்கப்பட்டதின் பேரில் தேவையான பொருட்கள் வாங்கி வழங்கிட 05-12-2024-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | கிருமிநாசிகளின் பெயர் | லிட்டர் அளவுகள் | நலம் எண்டர் பிரைசஸ் | SBP எண்டர் பிரைசஸ் |
|---|---|---|---|---|
| 1 | Abate | 100 Litre | 64800 | 69600 |
| 2 | Pynuthrem | 100 Litre | 99600 | 110100 |
| 3 | Bacilius Thurigenis | 50 kg | 60250 | 65500 |
| 4 | Flog control Liquid | 50 Litre | 87300 | 101500 |
| 5 | Lemon Grass Oil | 50 kg | 89200 | 90200 |
| 6 | Flag control Grandes | 50 Litre | 107700 | 112800 |
| 7 | Black Phenyl | 200 Litre | 15400 | 18200 |
| 8 | Sented Phenyl | 300 Litre | 18900 | 22200 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | Toilet cleaning Acid | 100 Litre | 5900 | 7100 |
| | மொத்தம் | | 549050 | 597200 |

என பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் நலம் எண்டர் பிரைசஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3655/2021/எச்1.

மன்றத்தீர்மான எண்.1127 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சியில் பொதுசுகாதார பிரிவு தொடர்பான சமூக விழிப்புணர்வு நாடகமாக கலை நிகழ்வுகளை மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்தியன்ரெட் கார்ஸ் சொசைட்டி இருந்து வருடாந்திர பங்களிப்புக்கு ஆண்டிற்கு ஒருமுறை 2500/- வீதம் வழங்குவதற்கு G.O.(M.S.) No.157, date 03-11-2016-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஆண்டு வாரியாக மேற்படி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை கீழ்கண்டவாறு.

| வரிசை எண் | ஆண்டு | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | 2020-2021 | 2500 |
| 2 | 2021-2022 | 2500 |
| 3 | 2022-2023 | 2500 |
| 4 | 2023-2024 | 2500 |
| 5 | 2024-2025 | 2500 |
| | மொத்தம் | 12,500 |

எனவே மேற்படி தொகை ரூ.12500/-யினை Indian Red Cross Society-க்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2416/2024/எப்1.

மன்றத்தீர்மான எண்.1128 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சி - பொதுசுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திட மற்றும் திரவ கழிவுகள் மேலாண்மை திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குப்பை இல்லா நகரம் (GFC) தொடர்பான தரச்சான்று பெறுவதற்கு தினசரி செய்தி நாளிதழ் மூலம் பொதுமக்களின் கருத்துகளை அறிவதற்காகவும் தினசரி நாளிதழ் மாலை மலரில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.5040/- வழங்கிட மன்ற அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2389/2012/எச்1.

மன்றத்தீர்மான எண்.1129 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய. A3 கடைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நாள் 14-12-2024-ல் பெறப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒருமாத வாடகை தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | B.M. ஆன்றணி பெனோ | 6500 |
| 2 | N. ரம்யா | 6000 |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியில் B.M. ஆன்றணி பெனோ என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாக உள்ளது. எனவே மேற்கண்டவருக்கு கடையினை ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2940/2024/அ2.

மன்றத்தீர்மான எண்.1130 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

நகராட்சிக்குட்பட்ட குழித்துறை நகர புல எண்.C5/118-ல் அரசு புறம்போக்கு நிலம் 52.0 சதுர மீட்டர் காலியாக உள்ளது. மேற்டி சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு சுற்றிலும் சுற்றுசுவர் கட்ட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1080/2024/எப்1.

மன்றத்தீர்மான எண்.1131 மேற்குறிப்பிட்ட இடம் நகரமைப்பு விதிகளின்படி கட்டிடம் கட்ட வழிவகை இல்லாத காரணத்தால் சுற்றுசுவர் கட்டி காலி இடத்தை அளவீடு செய்து குத்தகைக்கு விட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சி பகுதிகளில் உள்ள பொது இடங்கள் பொதுச்சுவர்கள் மேம்பாலம், பேருந்து நிலையம், பயணிகள் நிழலகம் மற்றும் பொது இடங்களில் நகராட்சி அனுமதியின்றி சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள், பேனர்கள் ஒட்டப்படுகிறது. இதனால் நகரின் அழகை சீர் குலைக்கிறது. எனவே தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 1998, பிரிவு 199 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண்.394-ன்படி கீழ்கண்ட துணைவிதிகள் உருவாக்கி அதனை செயல்படுத்திடவும், நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள், பேருந்து நிலையம், பயணிகள் நிழலகம்,, நெடுஞ்சாலை ஒரங்கள், மேம்பாலம், பொது தெருக்கள், பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான சுவர்களில் சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள் (wall Postures and wall painting) ஒட்ட தடை செய்யவும் அதனை மீறுபவர்கள் அச்சக உரிமையாளர், சுவரொட்டிகள் வெளியிட்டவர், சுவரொட்டி ஒட்டுபவர் மீது ரூ.5000/- வரை அபராதம் விதிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1259/2023/எப்1.

மன்றத்தீர்மான எண்.1132 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சி - பொதுசுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் உள்ள புல்வெட்டும் மிஷனின் கைபிடி பழுதடைந்துள்ளதாலும் அதை சரி செய்ய செலவின தொகை ரூ.850/-யினை திரு. ராதாகிருஷ்ணன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் புல்வெட்டும் மிஷனுக்கு புதிதாக ரோப் வாங்கிய வகைக்கு செலவின தொகை ரூ.450/- திரு. ராதாகிருஷ்ணன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி மொத்த செலவின தொகை ரூ.1300/-யினை துப்புரவு பணி மேற்பார்வையாளர், திரு. ராதாகிருஷ்ணன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3256/2022/எச்1.

மன்றத்தீர்மான எண்.1133 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் தொடர்பான CRSTN மென்பொருளில் புதிதாக திருத்தம் மேற்கொள்ளுவது தொடர்பாக இந்நகராட்சி அலுவலகத்தில் வைத்து 20-11-2024 அன்று ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வு கூட்டத்தில் ஆணையாளர், நகர்மன்ற தலைவர் மற்றும் சுகாதார ஆய்வாளர் அவர்களின் தலைமையில் தனியார் மருத்துவமனையின் மருத்துவர் மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு சம்பந்தமான கணினி பதிவாளர்கள் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டமைக்கு தேநீர் மற்றும் உணவு பொருட்கள் வாங்கிய செலவின தொகை ரூ.1200/-யினை திரு. ராதாகிருஷ்ணன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. எனவே மேற்படி செலவின தொகை ரூ.1200/-யினை துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. ராதாகிருஷ்ணன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3256/2022/எச்1.
மன்றத்தீர்மான எண்.1134 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் TN.75J.8227-2024-2025-ம் ஆண்டிற்கான தகுதி சான்று 17-12-2024-ம் தேதியுடன் முடிவடையும் நிலையில் வாகனத்தில் மெக்கானிக் + டிங்கர் மற்றும் FC-க்கான பணிகள் மேற்கொண்டு வட்டாரப்போக்குவரத்து அலுவலரிடமிருந்து சான்று பெற இருப்பதால் வாகனத்தில் உள்ள பணிகளை செய்ய தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2,95,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2778/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.1135 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு வாகனம் TN.74Z4605 05-02-2025-ல் தகுதி சான்று முடிவடைவதால் தகுதி சான்று பெறுவதற்கு வேண்டி பழுதுகள் சரி செய்திட தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.60,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1055/2013/இ1.

மன்றத்தீர்மான எண்.1136 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டில் உள்ள MRF வளர்மீட்பு மையத்தில் சேகரிக்கப்படும் தினசரி பிளாஸ்டிக் கழிவுகளை தரம் பிரித்து Bailing செய்து சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது பாரத் லாரி புக்கிங் ஆபிஸ் நிறுவனம் வாகனங்கள் தொடர்ந்து வராமல் இருந்து வருவதால் பிளாஸ்டிக் கழிவுகள் தேக்க நிலையில் உள்ளது. தற்போது பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே பிளாஸ்டிக் கழிவுகளை சிமெண்ட் ஆலைக்கு கொண்டு செல்ல வாடகை லாரி மூலம் ஏற்படும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2966/2024/எச்1.

மன்றத்தீர்மான எண்.1137 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.19 கருங்கல் சாலையில் மின்கம்ப எண்.2/19 முதல் 6/19 வரை உள்ள மழைநீர் வடிகால் பழுது ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் வழிந்தோடி சுகாதார கேடாக உள்ளது. மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைத்திட உத்தேச மதிப்பீடு ரூ.5,50,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2958/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1138 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.13</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வெட்டுமணி சிறுவர் பூங்காவில் குழந்தைகள் விளையாடுவதற்கு போதிய வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாக விளையாட்டு சாதனங்கள் அமைத்திட நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் உத்தேச மதிப்பீடு ரூ.9,00,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2959/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1139 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சியின் அருமனை சாலையில் வட்டாட்சியர் அலுவலகம் முதல் தபால் அலுவலகம் சந்திப்பு வரை உள்ள மழைநீர் வடிகால் பழுது ஏற்பட்டு பொதுமக்களுக்கு சுகாதார கேடாக உள்ளது. பொதுமக்கள் நலன்கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் வடிகால் அமைத்திட ரூ.3,60,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2960/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1140 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.8 மேட்டுகிராமம் வீதி 1 கான்கிரீட் சாலை (Unicode No,1490068O15)-யில் பழுது ஏற்பட்டு மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட சாலையினை சீரமைக்க ரூ.1,50,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2963/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1141 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சியின் குழித்துறை சந்திப்பில் அமைந்துள்ள நகராட்சி வணிகவளாகத்திற்கு சுற்றுசுவர் மற்றும் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தலின்பேரில் வணிகவளாகம் ஆய்வு செய்து ரூ.5,50,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2962/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1142 அனுமதிக்கப்பட்டது.

.பொருள் எண்.17

குழித்துறை நகராட்சி வார்டு எண்.7 CKP சாலை முதல் பெருந்தெரு மீன்சந்தை-2 (Unicode No,149007R033)-ல் சாலை பழுது ஏற்பட்டு பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. மேற்கண்ட சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் புதியதாக பேவர்பிளாக் சாலையாக அமைக்க ரூ.9,00,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண். /2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1143 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்18.

குழித்துறை நகராட்சி வார்டு எண்.12 துரும்பல் சாலையில் மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1.10 இலட்சம் நகர்மன்றத்தீர்மான எண்.1002, நாள் 19-09-2024-ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு 17-12-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜெயபிரகாஷ் | 7.12% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.ஜெயசிங் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள ஒப்ந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு. ஜெயசிங் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1877/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.1144 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.19

குழித்துறை நகராட்சியில் தொழிற்நுட்ப உதவியாளர் பணி மேற்கொள்ள ரூ.5.20 இலட்சம் மதிப்பீட்டில் நகர்மன்றத்தீர்மான எண்.1071, நாள் 29-11-2024-ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு 17-12-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ. எண். | பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | M/S. ராஜ் | 0.08% மதிப்பீட்டை விட |

| | | |
|---|---|---|
| | கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் | குறைவு |
| 2 | திரு.D. ஜஸ்டின்ராஜ் | 7.88% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.08% விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண்.2495/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1145 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.20</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரையிலான பகுதிகளில் நகர மக்களுக்கு நகராட்சியில் உள்ள 6 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் இருந்து பகிர்மான குழாய் மூலம் வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பிரதான குழாய்கள், விநியோக குழாய்கள் மற்றும் பொது குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்திட நகர்மன்ற தீர்மான எண்.973, நாள்:29-08-2024-ன் படி ரூ.6.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 17-12-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.ஜெயபிரகாஷ் | 0.09% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.ஜெயசந்திரன் | 0.19% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.ஜெயபிரகாஷ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு :- மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண்.1752/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1146 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.21

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 21 வரையிலான பகுதிகளில் வசிக்கும் நகர மக்களுக்கு நகராட்சியில் உள்ள 5 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் இருந்து பகிர்மான குழாய்கள் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யப்படும் பிரதான குழாய்கள், விநியோக குழாய்கள் மற்றும் பொது குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்திட நகர்மன்ற தீர்மான எண்.974, நாள்:29-08-2024-ன் படி ரூ.6.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 17-12-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.ஜெயசந்திரன் | 0.19% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.ஜெயபிரகாஷ் | 0.09% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.ஜெயபிரகாஷ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு :- மன்றம் முடிவு செய்யலாம், ந.க.எண்.1753/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1147 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.22

குழித்துறை நகராட்சியில் தட்டச்சர் பணி மேற்கொள்ள ரூ.3,15,000/- மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மான எண்.1070, நாள்:29-11-2024-ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு 17-12-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | M/S. ராஜ் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் | 0.14% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.D. ஜஸ்டின் குமார் | 9.59% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.14% விகிதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் முடிவு செய்யலாம்
ந.க.எண்.2781/2024/இ1

மன்றத்தீர்மான எண்.1148 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.23

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் பெருந்தெரு இசக்கியம்மன் கோவில் முதல் கடம்பன்கோடு (Unicode No,149006R024)-ல் சாலை மற்றும் மழைநீர் வடிகால் ஏற்பட்டு பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. மேற்கண்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க ரூ.2,80,000/-க்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1743/2024/இ1.
மன்றத்தீர்மான எண்.1149 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.